பக்கங்கள் 15+6

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 23 ஞாயிற்றுக்கிழமை 08.09.2024 | அதிர்வு 38

## நாட்டில் எட்டு திக்கிலும் ரணில் ஆதரவு அலை!

### வேலுகுமார் எம்.பி. பெருமிதம்



"நாட்டில் எட்டு திக்கிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கான ஆதரவு அலை வீசுகின்றது.

04 ▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# நாட்டைக் கொளுத்தியவர்களால் நாட்டை எவ்வாறு மீட்க முடியும்?

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்விக்கணை

"ரணில் விக்கிரமசிங்கவும், அநுரகுமார திஸாநாயக்கவும் புதிய அரசியல் திருமண விருந்து உண்ணுகின்றார்கள். நாட்டைத் தீயிட்டுக் கொளுத்துகின்றவர்களுக்கு, கொலைகளைச் செய்கின்றவர்களுக்கு இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. ரணிலுக்கும் அநுரவுக்கும் ஐக்கிய மக்கள் சக்தி அதிகாரத்துக்கு வந்து நாட்டுக்குச் சேவை செய்யும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

04 ▶

CLICK HERE VIDEO



# தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த குழுவினரை யாழ். தனியார் விடுதியில் சந்தித்த ரணில்



(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த குழுவினர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருநதினர் விடுதியில் இந்தச் சந்திப்பு நேற்று இரவு நடைபெற்றது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட சசிகலா ரவிராஜ், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான மயூரன், சுதர்சன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் மகன் கலையமுதன் மற்றும்

04 ▶



### அரசமைப்பையும் சட்டத்தின் ஆட்சியையும் பாதுகாத்து

# முறையான அரசாட்சியை முன்னெடுத்தே தீருவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உறுதி

“அரசமைப்பையும், சட்டத்தின் ஆட்சியையும், ஜனநாயகக் கட்டமைப்பையும் பாதுகாத்து, நல்லாட்சியை முன்னெடுக்கின்ற வகையில் பொறுப்புள்ள நிர்வாகக் கட்டமைப்பை முன்னெடுப்போம். தசராஜ தர்மத்தை மையப்படுத்தி முன்னெடுத்துச் செல்வோம்.” – என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

“ஒற்றுமையே நாட்டின் மிகப் பெரிய பலமாகும். எனவே இன, மத, குல, வகுப்பு, கட்சி பேதங்களின்றி ஒற்றுமையோடு முன்னோக்கிச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்போம். அத்தோடு நாட்டின் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் முறையாகவும் நியாயமாகவும் இடம்பெறும். சரியான வழிமுறையை கையாளும் போது எவருக்கும் திருட முடியாது.” – என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு கோட்டே ராஜ மகா விகாரைக்கு இன்று சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னரே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

“கொள்முதல் முறை இல்லாத காரணத்தால்தான் அதிகமான மோசடிகள் இடம்பெறுகின்றன. அதனால் சரியான நடைமுறைகளைக் கையாண்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.” – என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

“அவசர நிலைமைகளின்போதும் இடம்பெறுகின்ற கொள்முதல் முறைகளில் இருந்து விலகிப்பொருட்கள்கொள்வனவு செய்யப்பட்டமையால், கடந்த காலங்களில் பெருந்தொகையான நிதி மோசடி இடம்பெற்றிருக்கின்றன. வி.எப்.எஸ்.போன்ற கொடுக்கல் – வாங்கல்களில் மோசடி இடம்பெற்றுள்ளது. இது குறித்து நீதிமன்றத் தீர்ப்பொன்றும் கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே, அரச நிர்வாகத்துக்குள் முறையான கட்டமைப்பு ஒன்று காணப்பட வேண்டும்.” – என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.











# ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து கல்முனையில் துண்டுப் பிரசுரங்கள்

(வி.ரி.சகாதேவராஜா)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து கல்முனை மாநகரில் பிரச்சார நடவடிக் கைகளை ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேச இணைப்பாளரும் முன் னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பின ருமான பேராசிரியர் முருகேசு இரா ஜேஸ்வரன் ஆரம்பித்துள் ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் முருகேசு ராஜேஸ்வரன் தலைமையில் இந்தப் பிரசார செயற்பாடு கல்முனையில் நேற்று சனிக்கிழமை (07) இடம்பெற்றது.

இதன்போது நற்பிட்டிமுனை, பாண் டிருப்பு சந்திகள், கல்முனை சந்தை நகர வர்த்தக நிலையங்களுக்கு சென்ற பேராசிரியர் முருகேசு ராஜேஸ்வரன், ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குமாறு பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதன் போது அவரின் ஆதரவாளர்க ள் பலரும் பங்கேற்றனர்.





# சட்ட விரோதமாக மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவர் கைது!

(மஸ்கெலியா)

திடீர் சுற்றி வளைப்பின் போது சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள கிலன்டில் தோட்ட பெரிய நாடு தோட்ட பிரிவில் இடம்பெற்றுள்ளது.

சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகழ்வு இடம்பெறுகிறது என்று மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவுக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல்களை தொடர்ந்து அங்கு விரைந்த பொலிஸார் சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர் ஒருவரை கைது செய்து அவரிடம் இருந்த உபகரணங்கள் அனைத்தும் மீட்டனர்.

கைது செய்யப்பட சந்தேக நபர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்ய பட்டுள்ளார். எதிர்வரும் 11 ஆம் திகதி ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என பணிக்கப்பட்டுள்ளது.



# தேயிலைத் தோட்டத்திலிருந்து சிறுத்தைக் குட்டி மீட்பு



(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள தனியார் தோட்ட மொன்றிலிருந்து சிறுத் தைக் குட்டியொன்று உயிரு டன் மீட்கப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்கள் சிலர் வழங்கிய தகவலின் பிரகாரமே சிறுத்தைக் குட்டி மீட்கப்பட்டுள்ளது.

நல்லதண்ணி வனத் துறை அதிகாரிகளுக்கு அறி வித்ததை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வனத்துறை அதி காரிகள் வந்து சிறுத்தைக் குட்டியை மீட்டுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### நாட்டில் எட்டு...

எனவே, அவரின் வெற்றியைத் தடுக்க முடியாது. எமது நாட்டினதும், வீட்டினதும் வெற்றி ஜனாதிபதி ரணிலின் வெற்றி யிலேயே தங்கியுள்ளது என்ற நிலைப் பாட்டிலேயே மக்கள் உள்ளனர்."

– இவ்வாறு கண்டி மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி நாட்டுக்கு ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது என்பது தொடர்பில் மக்க ளுக்குத் தெளிவுபடுத்தும் பிரசாரக் கூட்டம் கம்பளையில் நேற்று நடைபெற்றது.

கம்பளை நகரவாசிகளும், அதனை சூழவுள்ள பகுதிகளில் வாழ்பவர்களும் எனப் பெருந்திரளானோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இதன்போது அவர் மேலும் கூறிய தாவது:-

"நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு தற்போது இயல்பு நிலையை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக் கின்றது. வியாபாரிகளுக்குத் தமது வியா பாரங்களைச் சுதந்திரமாகச் செய்ய முடி கின்றது. முயற்சியாளர்களுக்கு தமது தொழிலை வெற்றிகரமாகச் செயற்படுத்த முடிகின்றது.

எரிபொருள் நெருக்கடி இல்லை, மின்வெட்டு இல்லை, பாடசாலைகள் மூடப்படவில்லை. எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத் துவமே இதற்குக் காரணம்.

உலகில் பொருளாதார ரீதியில் வங்கு ரோத்தடைந்த நாடொன்று குறுகிய காலப்பகுதிக்குள் மீண்டெழவில்லை. இது எப்படி சாத்தியமென பல நாடுகளும் ஆராய்கின்றன. இந்தப் பொருளாதார அதிசயத்தை ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்கவே நிகழ்த்தியுள்ளார். அவரின் இந்தப் பயணம் தடைப்பட்டால் நாடு மீண்டும் இருண்ட யுகத்தை நோக்கியே செல்லும். அதிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காகவே ஜனாதிபதியின் வெற்றியில் பங்காளியாக நாமும், மக்கள் பக்கம் நின்று இணைந்துள்ளோம்.

இது பரீட்சயம் பார்ப்பதற்குரிய நேரம் அல்ல, அக்கினிப்பரீட்சையாகும். சிறு தவறு இழைந்தால்கூட எமது தலைவிதி நாசமாகிவிடும். எனவேதான் ரணிலின் தலைமைத்துவத்தைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும். இதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்." – என்றார்.

### நாட்டைக் கொளுத்தியவர்களால்...

ஹோமாகம நகரில் நடைபெற்ற பரப் புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ரணில், அநுர இருவருக்கும் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை இல்லை. இவர்களில் ஒருவருக்கு மக்களின் இதயத் துடிப்பு தெரிவதில்லை. 220 இலட்சம் மக்களின் எதிர்பார்ப்பு ஆசை, துன்பம், வேதனை, என்பவற்றையும் அறிவ தில்லை. இவர்களில் மற்றவர் அனைத் தையும் சீரழிக்கின்ற – எரியூட்டுகின்ற சமூகப் படுகொலைகளை முன்னிலைப் படுத்திச் செயற்படுகின்றவர். 200 ஆடைத் தொழிற்சாலைகளை உருவாக்கு கின்ற பணி முன்னெடுக்கப்பட்டபோது துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து பிரேமதாஸ உருவாக்கும் ஆடை தொழிற் சாலைகளைத் தீயிட்டு கொளுத்துவதாக எச்சரிக்கை விடுத்தவர்.

பாரிய அனர்த்தத்தை எதிர்கொண் டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், மக்களின் வாழ்க்கை நிலை மோசமடைந்திருக் கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் சுத்தமான ஆட்சி ஒன்றின் ஊடாக 220 இலட்சம் மக்களுக்கும் பொறுப்புக் கூறுகின்ற முறையிலான பொதுமக்களை மைய மாகக் கொண்ட அரசாட்சி முறை யொன்றை இந்த நாட்டுக்குள் கட்டி யெழுப்புவோம்." – என்றார்.

### தமிழரசுக் கட்சியை...

அகிலன் முத்துக்குமாரசாமி, குணாளன் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பில் பிரதேச அபிவிருத்தி தொடர்பில் விரிவான பேச்சில் ஈடுபட்ட தாகவும், விசேடமாக சாவகச்சேரியைத் தனியான பிரதேச செயலக பிரிவாகப் பிரிப்பது தொடர்பான கோரிக்கை மனுவை சமர்ப்பித்திருந்ததாகவும் சசிகலா ரவிராஜ் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதாக அறி வித்த நிலையில் அக்கட்சியின் குழுவினர் சுயேச்சை வேட்பாளராகக் களமிறங்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியமை பர பரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராஜாவுக்கும் இடையிலான சந்திப்பும் நேற்று இரவு மாவையின் இல்லத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் குறை வீட்டுத் திட்டங்களை பூரணப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை

## அங்கஜன் இராமநாதன் எம்.பி. தெரிவிப்பு

(த.சுபேசன்)

வடக்கு மாகாணத்தில் கடந்த ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டு அத்திபாரத்துடன் நிற்கும் குறை வீட்டுத் திட்டங்கள் அனைத்தையும் பூரணப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்துள்ளார்.

இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களினுடைய பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மாலை நெல்லியடி கொலிங்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினுடைய தேர்தல் பிரசார கூட்டத்தில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நல்லாட்சிக் காலத்தில் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த வேளையில் வீடு இல்லாதவர்களுக்கு வீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார்.



அந்த திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்துக்கும் ஏராளமான வீட்டுத் திட்டங்களை ஒதுக்கியிருந்தார். இந்த வீட்டுத் திட்டங்கள் அனைத்தையும் ஓர் அமைச்சரிடம் பொறுப்பும் கொடுக்கப்பட்டது.

ஆனால் அன்று ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள் அனைத்துமே இன்றும் அத்திபாரத்துடனேயே நிற்கின்றன.

ஆனால் அன்று அந்த வீட்டுத்திட்டங்களுக்கு பொறுப்பாக இருந்த அமைச்சர் இன்று கூறுகிறார், தாம் ஆட்சிக்கு வந்தால் அந்த குறை வீட்டுத் திட்டங்களை கட்டி முடிப்போம் என்று.

பொறுப்பு கொடுக்கப்பட்ட வேளையில் அந்த பொறுப்பை சரிவர முடிக்காதவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அதனை நிறைவேற்றுவார்கள் என்பதை எப்படி நம்புவது?

அன்று அவ்வாறு வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களால் வடக்கு மாகாணத்தில் நகையை அடகு வைத்து, சேமிப்பை கரைத்து, கடன் வாங்கி வீட்டுத் திட்டத்தை பூரணப்படுத்த முயன்றவர்கள் ஏராளமானவர்கள் உள்ளனர்.

இந்த மக்களுடைய அவல நிலையைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறை வீட்டுத் திட்டத்தில் உள்ள அனைவருக்கும் புதிய வீட்டுத்திட்டம் வழங்க புதிய திட்டம் ஒன்றை உருவாக்கி வருகிறார்.

அன்று வெறுமனே இருபதாயிரம் ரூபா கொடுத்து வீட்டுத்திட்டத்தை ஆரம்பிக்க கூறினார்கள்.

அவர்கள் அனைவருக்கும் புதிய வீட்டுத்திட்டம் வழங்கும் முழுமையான வேலைத்திட்டம் ஒன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்து விட்டார்.-என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உதயமும் அஸ்தமனமும்

'ஒட்டகத்துக்கு இடம் கொடுத்த மாதிரி...!' என்றாகி இருக்கின்றது ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடத்தைக் கொடுத்த பொதுஜன பெரமுனவின் நிலைமை.

'இடம் கொடுத்தால் மடத்தையே பிடுங்குவது போல' தான் ஜனாதிபதியாவதற்கு இடம் அளித்த மொட்டுக் கட்சியை உண்டு, இல்லை என்று துவம்சம் செய்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க - தனது அரசியல் நடவடிக்கைகள் மூலம்.

ஒரேயொரு எம்.பியாக தனது கட்சியிலிருந்து நாடாளுமன்றுக்குப் போனவர் ரணில் விக்கிரமசிங்க.

அப்போது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை வைத்திருந்தது மொட்டுக் கட்சி. இன்று அதன் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி வேட்பாளருமான நாமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவாக அவரது கட்சியில் விரல் விட்டு எண்ணக்கூடிய உறுப்பினர்களைத் தான் மிச்சமாக விட்டு வைத்திருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க. அவ்வளவு எம்.பிக்கள்தான் கட்சியில் எஞ்சி இருக்கின்றனர்.

அந்த நிலைமைக்கு மொட்டுக் கட்சியைச் சீரழித்துச் சின்னாபின்னமாக்கி நடுவீதிக்குக் கொண்டு வந்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்றால், அது மிகையான கூற்றல்ல.

நாட்டின் ஜனாதிபதிப் பதவியை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்குவதற்கு மொட்டுக் கட்சியின் தலைவர்கள் தீர்மானித்த போதே இது குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ரணில் விக்கிரமசிங்கவின் கடந்த கால அரசியல் நடவடிக்கைகள், போக்குகள், செயற்பாடுகளை நன்கு அறிந்தவர்கள் மொட்டுக் கட்சியை ரணில் கால ஓட்டத்தில் உடைத்தே தீருவார் என்று நேரத்துடனேயே எச்சரிக்கை விடுத்திருந்தனர். தீர்க்கதரிசனம் கூறியிருந்தனர். எனினும், அந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல், ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கியவர்கள் இப்போது அதன் பலனை - விளைவை - அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதுதான் உண்மை.

நாமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவாக மொட்டுக் கட்சியின் பக்கம் தங்கி நின்ற நான்கு ராஜாங்க அமைச்சர்களைக் கடைசியாகப் பதவி நீக்கம் செய்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அரச நாடாளுமன்ற குழுவில் மொட்டுக் கட்சியையும் அதன் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவையும் ஆதரிக்கும் எவராவது மிஞ்சினால், அவர்களை ஆளும் தரப்பிலிருந்து வெளியே(ற்)றி விடுமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருக்கின்றார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த நடவடிக்கையை 'பச்சை அரசியல் பழிவாங்கல்' என்று விசனத்துடன் விமர்சித்திருக்கின்றார் மொட்டுக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம்.

''எங்கள் ஆதரவினால் மட்டுமே ரணில் விக்கிரமசிங்கவினால் ஜனாதிபதியாக முடிந்தது. அதற்குத் தமது தற்போதைய பழிவாங்கல் நடவடிக்கைகள் மூலம் பதிலளித்துக் கொண்டிருக்கின்றார் அவர். ரணில் விக்கிரமசிங்க என்ன செய்தாலும், ஒரு விடயத்தை அவர் மறந்து விடக் கூடாது. அவரது அரசியல் பயணம் இந்தத் தேர்தலுடன் - வரும் 21 ஆம் திகதியுடன் - முடிவடைந்து விடும். ஆனால் எங்களின் - மொட்டுக் கட்சியின் - அரசியல் பயணம் அப்படிக் கிடையாது. அதனால் ரணில் விக்கிரமசிங்கவின் இத்தகைய நடவடிக்கைகளால் ஒன்றும் பெரிதாக பாதிப்பு எமக்கு ஏற்பட்டு விடாது. அவற்றைப் பொருட்படுத்தாமல் எங்கள் அரசியல் பயணத்தை மக்கள் ஆதரவுடன் நாம் வெற்றிகரமாக தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம்.''- என்று அவர் கூறியிருக்கின்றார்.

அவர் கூறுவது ஓரளவு சரிதான். புறக்கணிக்க முடியாத கூற்றுத்தான். இன்னும் இரண்டு வாரங்களில் வெளியாகப் போகின்ற ஜனாதிபதி தேர்தலில் முடிவில் ரணில் விக்கிரமசிங்க தோற்றால், பெரும்பாலும் அவரது அரசியல் பயணம் - வாழ்வு - அத்தோடு அஸ்தமித்து விடும். அது மட்டுமல்ல, அவருக்கு ஆரத்தி எடுத்து, ஆலாபரணம் செய்வதற்காக மொட்டுக் கட்சியை விட்டு வெளியேறி, தனிக் கூட்டணி அமைத்திருக்கும் எம்.பிக்கள், அமைச்சர்கள் பலரினதும் அரசியல் வாழ்வும் கூட அத்தோடு அஸ்தமித்துத்தான் போகும்.

புதிய உதயங்களையும், பல அஸ்தமனங்களையும் தருவதுதானே தேர்தல்...? இந்த தேர்தலும் கூட அப்படித்தான் அமையும் என்பது போலத் தோன்றுகின்றது.



# தரம் உயர்வுக்குப் பாராட்டு!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நடுவராக தரம் உயர்வு பெற்று நடுவராக கடமையாற்றிய ஏ. எம். ஜப்ரான், மயோன் கல்வித் திட்டம் மற்றும் சமூக அமைப்பால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

ஆசிய கால்பந்தாட்ட சம்மேளனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நடுவர் அக்கடமி குழாமில் 2018 ஆம் ஆண்டிலிருந்து 4 ஆண்டுக்கான தொடர் பயிற்சியை மலேசியாவில் பூர்த்தி செய்தார்.

ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நடுவர் அக்கடமியால் நடாத்தப்பட்ட சுற்றுப் போட்டியில் சிறப்பாக நடுவகம் வகித்ததால் நடுவராக தரம் உயர்த்தப்பட்டு சில நாள்களுக்கு முன் கால்பந்தாட்ட இறுதிப் போட்டியிலும் நடுவராக கடமையாற்றியுள்ளார்.

இவரை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளரும் மயோன் கல்வித் திட்டம் சமூக அமைப்பின் தலைவருமான றிஸ்லி முஸ்தபா ஜப்ரானின் வீட்டுக்கு சென்று வாழ்த்தி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

இதன் போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட பிரதிச் செயலாளர் கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சகோதரர் எம்.ஐ.எம். மனாப்பும, ஜப்ரானின் குடும்பத்தினரும் கலந்து கொண்டனர்.





# ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து அதாவுல்லா எம்.பி. மக்கள் சந்திப்பு

(நவாஸ்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை வெல்லவைப்பதன் மூலம் நாட்டை வென்று, பொருளாதாரத்தை மீள்கட்டமைக்கும் நோக்கில் ரணிலுக்கு ஆதரவு வழங்கி நேற்று சனிக்கிழமை நாடு தழுவிய ரீதியில் அனைத்து அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதேச அமைப்பாளர்கள் தங்களது பிரதேசங்களில் மக்களை சந்தித்தனர்.

அந்தவகையில், தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லா கிழக்கு முழுவதும் மக்களை சந்தித்தார்.

பொத்துவில் தொகுதி ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளர் யூ.கே.ஆதம் லெப்பை மற்றும் நூற்றுக்கணக்கான கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டார்.



இந்த நடவடிக்கை அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை போன்ற பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டன.








# நிந்தவூர் அல் அஸ்றக் மாணவன் ஹின்ஸான் தங்கம் வென்றார்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நிந்தவூர் அல் அஷ்றக் தேசிய பாடசாலை மாணவன் ஹின்ஸான் கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான 12 வயது ஆண்கள் பிரிவில் 60 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்றார்.

மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட மெய்வல்லுனர் போட்டியில் நிந்தவூர் அல் அஷ்றக் தேசிய பாடசாலை மாணவன் எம்.எச். எம்.ஹின்ஸான் 12 வயது ஆண்கள் பிரிவில் 60 மீற்றர் ஓட்ட நிகழ்ச்சியில் 8.04 செக்கன்கள் ஓடி முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.






# சஜித்தின் வெற்றியை உறுதிப்படுத்தும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கூட்டம்

(நூருல் ஹுதா உமர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சம்மாந்துறை மத்திய குழு கூட்டம், அதன் செயலாளர் எம்.எஸ்.எம். அசாருதீன் தலைமையில் நேற்று (07) சனிக்கிழமை சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் எம்.ஐ.எம். மன்சூர் கலந்து கொண்டார்.

கூட்டத்தில் பொதுக் கூட்டங்கள், வட்டார ரீதியான கருத்தரங்குகள், வட்டார ரீதியான அலுவலகங்கள் திறத்தல், வட்டார ரீதியான வீடு வீடாகச் செல்லும் செயற்பாடுகளை முன்னெடுத்தல்போன்ற பல விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிச் செயலாளர் மன்சூர் ஏ காதிர், உயர்பீட உறுப்பினர்களான ஏ.எம்.ஏ.அஸீஸ், ஏ.எம்.தௌபீக், முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் சட்டத்தரணி எம்.எம். சௌபீர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சட்டத்தரணி யூ. கே சலீம், முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் எஸ். நளீம், கலாநிதி எஸ். எல்.றியாஸ், சம்மாந்துறை இளைஞர் அமைப்பாளரும் தைக்காப் பள்ளி வட்டார வேட்பாளருமான அர்ஷத் இஸ்மாயில், வீரமுனை வட்டார வேட்பாளர் எம்.எல்.சுபைதீன்,எம்.றியாஸ் மற்றும் கிளை தலைவர்கள் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் மத்திய குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



# கஞ்சாவுடன் ஒருவர் கைது!

(எம். எப். றிபாஸ்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஜாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் படி குறித்த பிரதேசத்துக்குச் சென்ற பொலிஜார் சந்தேக நபரைக் கைது செய்தனர்.

அவரிடம் இருந்து குறிப்பிட்டளவு கஞ்சாவையும் கைப்பற்றியிருந்தனர்.

சந்தேகநபரை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது சந்தேக நபரை எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# வைத்தியசாலைகளின் முன்னேற்றத்துக்கு அபிவிருத்திக் குழு பங்களிப்பும் அவசியம்

## பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் தெரிவிப்பு

(றியாஸ் ஆதம்)

வைத்தியசாலைகளின் அபிவிருத்தியில் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுக்களின் பங்களிப்பும் மிகப் பிரதானமானதாக இருக்க வேண்டும் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தெரிவித்தார்.

மல்வத்தை பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பாக அந்த வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரை நேற்று சனிக்கிழமை (07) சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மல்வத்தை வைத்தியசாலையில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள், தற்போதுள்ள தேவைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாகவும் கேட்டறிந்துகொண்ட பிராந்தியப் பணிப்பாளர் அபிவிருத்திக் குழுவால் முன்வைக்கப்பட்ட தேவைகளில் சிலவற்றை நிவர்த்தி செய்து தருவதாகவும் இதன்போது உறுதியளித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் போது பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிரும் கலந்துகொண்டார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள வைத்தியசாலைகளின் அபிவிருத்தி தொடர்பாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகல வைத்தியசாலைகளதும் அபிவிருத்திக் குழுக்களை சந்தித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. வைத்தியசாலைகளின் தேவைகளை நிவர்த்தி செய்து பொது மக்களுக்கு சிறந்த சுகாதார சேவை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

# கிழக்கு மாகாண மெய்வல்லுநர் போட்டி; நீளம் பாய்தலில் மூன்றாவது வருடமும் தங்கம்

(றியாஸ் ஆதம்)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டியில் பாலமுனை அல் – ஹிக்மா வித்தியாலயத்துக்கு தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கில் இடம்பெற்று வருகிறது.

இதில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற18 வயதுக்கான நீளம் பாய்தல் போட்டியில் பங்குபற்றிய ஹிக்மா வித்தியாலய மாணவன் எம்.எச்.எம்.நிப்றான் 6.43 மீற்றர் பாய்ந்து முதலாமிடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியின் நீளம் பாய்தல் நிகழ்ச்சியில் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற போட்டிகளிலும் தங்கப் பதக்கம் வென்ற நிப்றான் இம்முறையும் தங்கப் பதக்கம் வென்று தனது பாடசாலைக்கும் பிரதேசத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

மாணவன் நிப்றானுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துவரும் பாடசாலை சமூகத்தினர் அவருக்குப் பயிற்சியளித்த விளையாட்டுப் பொறுப்பாசிரியர் ஏ.எச்.எம்.தபுறானி, விளையாட்டு பயிற்றுவிப்பாளர் எம்.எம்.சாஜின், பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்கும் நன்றி தெரிவித்துள்ளனர்.






# பாடசாலைக்குத் தளபாடம் வழங்கல்

(ஹஸ்பர்)

கிண்ணியா கல்வி வலயத்தில் உள்ள அல் நஜாத் பாடசாலையில் பாடசாலை மாணவர்களுக்கான தளபாடங்கள் கையளிக்கப்பட்டுள்ளது.

இவ் வைபவத்தில் முஸ்லிம் எயிட் லண்டன் தலைமையகத்தின் தலைவர் முஸ்தபா பாரூகி, உப தலைவர் பாரியா அலி, முஸ்லிம் எய்ட் யுகே யின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் மொகமட் அப்துல் அஸீஸ், அட்லீன் ரசாக், உலகலாவிய நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் அபு அகீம் மற்றும் முஸ்லிம் எய்ட் இலங்கைக்கான பணிப்பாளர் பைசர்கான் ஆகியோருடன் முஸ்லிம் எய்ட் சிரேஷ்ட ஊழியர்களும் வலயக் கல்வி அலுவலக சிரேஷ்ட ஊழியர்களும் பாடசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர்.

இவ்வாறான தளபாடங்கள் விநியோகமும் கல்வி அபிவிருத்திக்கான பல்வேறு செயற்பாடுகளும் மேலும் பல பாடசாலைகளுக்கு சமூக பங்கு பற்றுதலுடனான கல்வி அபிவிருத்தி என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முஸ்லிம் எய்ட் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன.







# மாணவர்களது நலன் கருதி கணினிப் பிரிவு திறந்துவைப்பு

**(றியாஸ் ஆதம்)**

பாலமுனை ஸஹ்வா அரபுக் கல்லூரியில் புதிதாக சகல வசதிகளையும் கொண்ட கணினிப் பிரிவொன்று மாணவர்களது நன்மை கருதித் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த கணனிப் பிரிவை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை (7) கல்லூரியின் பணிப்பாளர் சபைத் தலைவர் அஷ்ஷேஹ் இத்ரீஸ் ஹஸன் தலைமையில் இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் அஷ்ஷேஹ் ஏ.ஆர்.ரமீன், பிரதி அதிபர் உஸ்தாத்மார், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், மாணவர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தனவந்தர்கள் மற்றும் கல்லூரியின் பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் சுமார் 2 மில்லியன் ரூபா நிதியில் இந்தப் புதிய கணினிப் பிரிவு திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# பாலையடி வாலவிக்னேஸ்வரர் சித்திரத் தேரோட்டம் நேற்று!

**(வி.ரி.சகாதேவராஜா)**

காரைதீவு வரலாற்றில் முதல் தடவையாக வரலாற்றுப்பிரசித்தி பெற்ற காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்தின் முதலாவது சித்திரத் தேரின் கன்னித் தேரோட்டம் நேற்று (07) சனிக்கிழமை பகல் 12 மணியளவில் விநாயகர் சதுர்த்தியன்று ஆலயத்தில் நடைபெற்றது.

39 லட்சம் ரூபா செலவில் 21 அடி உயரம் கொண்டதாக இந்தச் சித்திரத் தேர் அமையப்பெற்றுள்ளது. இதுவே காரைதீவு வரலாற்றில் முத லாவது சித்திரத்தேர் என்பது குறிப்பிடத் தக்கது.

தேரை வழங்கிய அமரர் சண்முக ரெத்தினம் குருக்கள் குடும்பத்தைக் கௌரவிக்கும் நிகழ்வு ஆலயத் தலைவர் இ.தவராசா தலைமையில் இடம்பெற்றது.

அதன் போது இந்தத் தேரை குடும்பம் சார்பாக கையளித்த மஹோற்சவ குருவான சுவிட்சர்லாந்து ஸ்ரீ வரசக்தி விநாயகர் ஆலய பிரதம குரு கிரியா திலகம் சிவஸ்ரீ சிவ பிரபாகர குருக்கள் ஆலய பரிபாலன சபையினரால் கௌரவிக்கப்பட்டார். இவர் "விநாயக பக்தி கிரியாசாகரர்" என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அக்கரை மித்திரன் யாத்த வாழ்த்துப்பாவை வி.ரி.சகாதேவ ராஜா வாசித்து கையளித்தார்.









# யாழ். புனித பற்றிக்ஸ் கல்லூரி தேசிய கிட்ஸ் ரெனிஸ் சம்பியன்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

இலங்கை பாடசாலைகள் ரெனிஸ் சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்த வட பிராந்திய பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய ரெனிஸ் சம்பியன்சிப் போட்டியில் யாழ்ப்பாணம் புனித பற்றிக்ஸ் கல்லூரியின் 4 சிறுவர் அணிகள் பங்கேற்றன.

ரெட் போல் ரெனிஸ் அணி மற்றும் கிறீன் போல் கோல்ட் அணி ஆகியன சம்பியன்களாகவும், ஒரேஞ் போல் அணி இரண்டாம் இடத்தையும், கிறீன் போல் சில்வர் அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.







# அம்பாறை உகன பிரதேசத்தில் ரணிலை ஆதரித்துக் கூட்டம்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

அம்பாறை உகன பிதேசத்தில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து தேர்தல் பிரச்சாரக் கூட்டம் இடம் பெற்றது.

பெண்கள், இளைஞர்கள், சுய தொழில் முனைவோருக்கு சுபீட்சமான தேர்தல் விஞ்ஞாபனமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனம் உள்ளது என்று முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் தரிந்து இதன் போது தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாறை தொகுதி அமைப்பாளர் அநுர முனசிங்க, உகன பிரதேச சபை முன்னாள் தவிசாளர் உபுல் பிரியந்த, உகன பிரதேச சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் புஷ்பகுமார ஆகியோர் இந்தப் பிரச்சார கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.







# தமிழர் எங்கு பாதிக்கப்பட்டாலும் தாய்வீடாக தமிழகம் இருக்கிறது

## சிகாகோவில் முதல்வர் ஸ்டாலின் உரை

தமிழர்கள் எங்கு பாதிக்கப்பட்டாலும், நமக்கு என்று தாய்வீடாக தமிழ்நாடு இருக்கிறது என்ற உணர்வை நம்பிக்கையை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்படுத்தி வருகிறது என்று அமெரிக்காவின் சிகாகோ நகரில், அமெரிக்க வாழ் தமிழர்களிடம் பேசிய முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

அமெரிக்காவின் சிகாகோவில், சிகாகோ தமிழ் கூட்டமைப்பு மற்றும் சிகாகோ தமிழ்ச் சங்கங்களின் சார்பில் நடைபெற்ற அமெரிக்க வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு முதல்வர் ஸ்டாலின் உரையாற்றினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழ்நாட்டில் நான் முதலமைச்சராக – திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டால், எப்படி இருக்குமோ, அதைவிட அதிகமான உணர்வுப் பெருக்கோடு சிகாகோவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும் நல்ல வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது.

தமிழ் மண்ணில் இருக்கும் மாதிரியான உணர்வை எனக்கு ஏற்படுத்தியிருக்கும் உங்களுக்கு, உங்களில் ஒருவனாக – உங்கள் குடும்பங்களில் ஒருவனாக நான் எனது இதயபூர்வமான நன்றியை மீண்டும் மீண்டும் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். நான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு, முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஐக்கிய அரபு அமீரகம், ஜப்பான், சிங்கப்பூர், ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்குச் சென்று அதற்குப் பிறகு, அமெரிக்காவுக்கு லேட்டாக வந்திருந்தாலும் லேட்டஸ்டாக வரவேற்பு கொடுத்திருக்கிறீர்கள்.

தொழில் வளர்ச்சியை பொருத்தவரைக்கும், நான் எந்த நாட்டுக்குச் சென்றாலும், எந்த நிறுவனங்களின் அதிபர்களை சந்தித்தாலும், இந்தியாவிலேயே தமிழ்நாடு எப்படியெல்லாம் முன்னிலை வகிக்கிறது – தமிழ்நாட்டில் என்னென்ன சிறப்புகள் இருக்கின்றன என்று சொல்லி, தொழில் தொடங்க வாருங்கள் என்று நான் அழைப்பு விடுப்பேன். அதனால்தான், முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு என்ற பெருமையை அடைந்திருக்கிறோம்.

எந்த நாட்டுக்கு நான் உத்தியோக பூர்வ பயணமாக சென்றாலும், என் எண்ணம் எல்லாம், அங்கு வாழும் நம்முடைய தமிழர்களை சந்திக்க வேண்டும், அங்கு இருக்கும் தமிழ் அமைப்புகளை சந்திக்க வேண்டும் என்றுதான் இருக்கும். அப்படி நான் பல்வேறு நாடுகளுக்குச் சென்று தமிழர்களை சந்தித்திருந்தாலும், தமிழ் நாட்டு மக்கள் அதிகமாகப் புலம் பெயர்ந்து வாழும் நாடான அமெரிக்காவில் உங்கள் முகங்களை பார்க்கும் போது, மீண்டும் சொல்கிறேன் பேசாமல் அப்படியேநின்றுகொண்டுஉங்களையே பார்த்துக்கொண்டு இருக்கலாம் என்று தோன்றுகிறது.

அனைவரும் பிறக்க ஒரு தாய் வயிறு தாங்காது என்ற காரணத்தால் தான், தனித்தனி தாயினுடைய வயிற்றில் பிறந்த அன்பு உடன்பிறப்புகள் நாம் என்று சொல்வார். நாமெல்லாம் தனித்தனி தாயுடைய வயிற்றில் பிறந்திருந்தாலும் – நாம் எல்லோருக்கும் இந்த உறவை – பாசத்தை ஊட்டிய ஒரு தாய் இருக்கிறார், அவர்தான் தமிழ்த்தாய்.” – என்றார்.

# மீனவர்கள் கைது செய்யப்படும்போது முதல்வர் கடிதம் எழுதுவது பயனற்றது

## டி.டி.வி. தினகரன் தெரிவிப்பு



எதிர்வரும் காலங்களில் தமிழக மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க மத்திய, மாநில அரசுகள் எடுக்க வேண்டும் என அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து இன்று அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப் பட்டினம், நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த 12 மீனவர்களை கைது செய்திருக்கும் இலங்கை கடற்படை, மீனவர்கள் சென்ற மூன்று விசைப் படகுகளையும் பறிமுதல் செய்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த இரு தினங்களுக்கு முன்பு இதே புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பது மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட நிலையில், மேலும் 12 பேர் கைது செய்யப்பட்டிருப்பது அப்பகுதி மக்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தொடர் கதையாகி வரும் இலங்கை கடற்படையினரின் அராஜகத்திற்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காமல், ஒவ்வொரு கைதின் போதும் மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவதையே வாடிக்கையாக கொண்டிருக்கும் முதல்வர் ஸ்டாலின் செயல்பாடு எந்த வகையிலும் பயனளிக்காது.

எனவே, இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் மற்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ள படகுகளை உடனடியாக விடுவிக்கத் தேவையான முயற்சிகளை மேற்கொள்வதோடு, இனி வரும் காலங்களில் தமிழக மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்துகிறேன்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.



# உக்ரைனின் தாக்குதலால் பற்றியெரியும் ரஷ்ய இராணுவ ஆயுத களஞ்சியசாலை

ரஷ்ய இராணுவத்தின் ஆயுத களஞ்சியசாலை ஒன்றின் மீது உக்ரைன் ஆளில்லா விமானம் ஒன்று நடத்திய துல்லியமான தாக்குதலில் அந்த களஞ்சியசாலை பற்றியெரிவதுடன் அப்பகுதி மக்கள் அவசரமாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர். அத்துடன் ரஷ்யாவின் முளவசழபழணாளமல மாகாணத்தில் அவசரநிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் முளவசழபழணாளமல மாகாணத்தில் உள்ள ஏழசழநெணா என்னுமிடத்தில் அமைந்துள்ள ஆயுத களஞ்சியசாலை ஒன்றின் மீதே அதிகாலை 03 மணியளவில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலை அடுத்து ஆயுத களஞ்சியசாலை வெடித்து சிதறி தீப்பற்றி எரியத் தொடங்கியது.

இதனையடுத்து மாகாணத்தில் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டதுடன் அங்குள்ள Soldatskoye என்னும் கிராமத்தில் வாழும் நூற்றுக் கணக்கான பொதுமக்கள் 50 மைல் தொலைவிலுள்ள வேறொரு பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

அவர்கள், தற்காலிக தங்கும் மையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலை அடுத்து ஏற்பட்ட சேதம் தொடர்பில் தகவல் எதுவும் தெரியவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மனி சென்ற விமானம் துருக்கியில் திடீரென தரையிறக்கம்



இந்தியாவிலிருந்து ஜேர்மனி நோக்கி சென்று கொண்டிருந்த விமானத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட விடயம் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் அது வதந்தி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் மும்பை விமான நிலையத்திலிருந்து நேற்று ஏளைவயசய விமான நிறுவனத்திற்கு சொந்தமான விமானம் ஒன்று ஜேர்மனியின் பிராங்பர்ட் விமான நிலையம் நோக்கிப் புறப்பட்டது.

அதில், 234 பயணிகளும் மற்றும் 13 பணியாளர்களும் பயணித்துள்ளனர்.

இந்நிலையில், விமானம் வானில் பறந்து கொண்டிருக்கும் போது விமானத்தின் கழிவறையில் விமானத்தில் வெடிகுண்டு உள்ளது என எழுதப்பட்ட காகிதம் ஒன்று கிடைத்துள்ளது.

இதனையடுத்து உடனடியாக விமானம் துருக்கியிலுள்ள Erzurum நகரில் தரையிறக்கப்பட்டுள்ளது.

அந்நகர அதிகாரிகள் உடனடியாக விமானத்தை சோதனையிட்டுள்ளார்கள்.

இதன்போது சோதனையில் விமானத்தில் சந்தேகத்துக்குரிய எந்த பொருள்களும் கிடைக்கவில்லை.

ஆகவே, வெடிகுண்டு மிரட்டல் ஒரு வதந்தி என தெரியவந்துள்ளது. என்றாலும், ஏளைவயசய விமான நிறுவனம், பயணிகளுக்காக மாற்று விமானம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நாட்டை விட்டு வெளியேறினார் வெனிசுலா எதிர்க்கட்சித் தலைவர்

வெனிசுலாவின் எதிர்க்கட்சித் தலைவர் எட்மண்டோ கோன்சாலஸ் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான நிலையில், அந்த முடிவுகளை எதிர்க்கட்சி ஏற்க மறுத்ததை அடுத்து எதிர்க்கட்சித் தலைவரைக் கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வெனிசுலா எதிர்க்கட்சித் தலைவர் எட்மண்டோ கோன்சாலஸ் தலைமறைவாகியிருந்தார்.

இந்நிலையில், தற்போது அவர் ஸ்பெயினிடம் அரசியல் தஞ்சம் கோரி நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பக்கங்கள் 06

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை | 08/09/2024

## வாகன விபத்தில் யுவதி படுகாயம்!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 08 நேற்று காலை விட்பியில் 23 வயது பெண் ஒருவர் வாகன விபத்தில் சிக்கி உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். 02



# நியூயோர்க்கில் தாக்குதலுக்குத் திட்டமிட்ட கனடாவில் வாழும் பாக். நாட்டவர் கைது!

அமெரிக்காவின் முக்கிய நகரில் யூத மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடந்த திட்டமிட்ட விவகாரத்தில் கனடாவில் வாழும்ஆசியநாட்டவர்கைதாகியுள்ளார்.

அவர் பற்றிய மேலதிக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வெறும் 20 வயதேயான அந்த நபர், இஸ்ரேலில் ஹமாஸ் முன்னெடுத்த அக்டோபர் 7 தாக்குதலின் முதல் ஆண்டு நினைவு நாளில் நியூயோர்க் நகரில் யூத மக்கள் மீது தாக்குதலுக்கு திட்டமிட்டுள்ளார். 02





# கொலை தொடர்பாக கனடாவில் தேடப்பட்டு வரும் இளம் பெண்!

கனடாவில் நாடு தழுவிய அடிப்படையிலான பிடி விறாந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பெண் ஒருவர் தேடப்பட்டு வருகின்றார்.

துப்பாக்கிச்சூட்டு சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய பெண் ஒருவரே இவ்வாறு தேடப்பட்டு வருகின்றார்.

ஸ்டேஸி டென்வேய், என்ற 36 வயதான பெண் ஒருவரையே பொலிஸார் தேடி வருகின்றனர். அந்தப் பெண்ணின் படம் வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாத ஆரம்பத்தில் ரொறன்ரோவில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தை மேற்கொண்டவர் இவர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

37 வயது ட்ரிஸ்டோன் மெக்னெலி என்ற நபரே இந்த சம்பவத்தில் உயிரிழந்திருந்தார்.

## வாகன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை 6:20 மணியளவில், ப்ரோக் மற்றும் கார்டன் தெருக்களுக்கு இடையில், இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி, அந்தப் பெண் பஸ்ஸிலிருந்து இறங்கி சிவப்பு விளக்கு எரிந்ததாகக் கூறப்படும் நேரத்தில் வீதியைக் கடக்கும்போது வாகனம் மோதிவிட்டு நிற்காமல் ஓடிவிட்டது.

பொலிசார் முதலில் அவர் ஆபத்தான நிலையில் இருப்பதாகக் கூறியபோதிலும், பின்னர் அவரது காயங்கள் இப்போது ஆபத்தற்றவை என்பதை உறுதிப்படுத்தினர்.

இதற்கிடையில், சாரதி சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றார் எனவும், கடைசியாக ப்ரோக் ஸ்ட்ரீட் தெற்கிலிருந்து விக்டோரியா ஸ்ட்ரீட் மேற்கில் மேற்கு நோக்கி பயணித்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.




## நியூயோர்க்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதற்கட்ட விசாரணையில், அந்த நபர் பாகிஸ்தான் நாட்டவர் என்றும் முகமது ஷாசீப் கான் என்பது அவரது பெயர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. புதன்கிழமை கைது செய்யப்பட்ட அந்த நபர் மீது பல்வேறு பிரிவுகளில் வழக்குப் பதியப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுஒக்டோபர் 7 ஆம் திகதி நியூயோர்க் நகரில் தாக்குதல் நடத்தவே முகமது ஷாசீப் கான் திட்டமிட்டுள்ளார். கடந்த அக்டோபர் 7ம் திகதி ஹமாஸ் படைகள் முன்னெடுத்த திடீர் தாக்குதலில் 1,200 பேர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் தெரிவித்து வந்தாலும், 600 பேர்கள் வரையில் கொல்லப்பட்டிருக்கலாம் என்றே தனியார் அமைப்புகள் குறிப்பிடுகின்றன.

ஆனால் பதிலுக்கு இஸ்ரேல் முன்னெடுத்துவரும் கொடூர ராணுவ நடவடிக்கைகளில் இதுவரை கொல்லப்பட்டுள்ள பாலஸ்தீன மக்களின் எண்ணிக்கை 41,000 ஐ எட்டியுள்ளது. மட்டுமின்றி காஸா பகுதிக்கான மொத்த உதவிகளையும் இஸ்ரேல் முடக்கியுள்ளதால் மிக மோசமான பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் ஐ.எஸ். அமைப்பு மீதான தமது ஆதரவை சமூக ஊடக பக்கத்தில் ஷாசீப் கான் வெளிப்படுத்தினார் எனக் கூறப்படுகிறது. இதனையடுத்து இந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் இரகசியப் பொலிஸார் ஷாசீப் கானுடன் தொடர்பு கொண்டு, அவரது தாக்குதல் திட்டம் குறித்து தகவல்களை சேகரித்துள்ளனர்.

மட்டுமின்றி, தாம் தொடர்பு வைத்திருப்பது பொலிஸார் என உணராமல், தமது தாக்குதல் திட்டத்திற்கு ஆயுதம் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளார். நியூயோர்க் நகரில் யூத மக்கள் அதிகமாக வசிப்பதால், தமது தாக்குதலை அந்த நகரில் நிகழ்த்த முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தங்களது திட்டம் நிறைவேறும் என்றால் அது அமெரிக்க மண்ணில் மிக மோசமான தாக்குதல் சம்பவமாக இருக்கும் என்றும் கான் அதிகாரிகளிடம் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அக்டோபர் தாக்குதலுக்காக அமெரிக்கா புறப்பட்ட கான், அமெரிக்க - கனடா எல்லையில் 12 மைல்கள் தொலைவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தும் நிரூபணமானால் 20 ஆண்டுகள் வரையில் சிறை தண்டனை விதிக்கப்படலாம் என்றே கூறப்படுகிறது.





# கோலாகலமாக நடைபெற்று வருகின்ற ரொறன்றோ சர்வதேசத் திரைப்பட விழா

ஒன்றாரியோ, செப்ரம்பர் 08

ரொறன்றோ சர்வதேச திரைப்பட விழா 11 நாள்கள் நட்சத்திரங்கள் நிறைந்த திரைப்படங்கள் மற்றும் நிகழ்வுகளுடன் நடந்து வருகிறது.

நூற்றுக்கணக்கான ரசிகர்களும் ஆட்டோகிராப் வேட்டைக்காரர்களும் கிங் ஸ்ட்ரீட்டில் சில பிரபல நட்சத்திரங்களுடன் செல்ஃபி எடுக்கும் நம்பிக்கையில் கூடினர்.


இந்த ஆண்டு திருவிழாவில் எல்டன் ஜான், ஏஞ்சலினா ஜோலி, செலினா கோம்ஸ், புரூஸ் ஸ்பிரிங்ஸ்டீன் மற்றும் பல பிரபலங்கள் வெளிவருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.














# வாரத்தில் 3 அலுவலகத்தில் வேலை; விதிமுறை நாளை முதல் அமுலுக்கு!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 08

மத்திய அரசு ஊழியர்கள் வாரத்தில் குறைந்தபட்சம் மூன்று நாள்கள் அலுவலகத்திற்குத் திரும்ப வேண்டும் என்கிற விதிமுறை நாளை முதல் அமுலுக்கு வருகின்றது.

பொதுச் சேவை சங்கங்கள் இந்தக் கொள்கையை எதிர்த்து அதிகாலை பேரணியுடன் வாரத்தை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் தொழிற்சங்கங்களின் 'அதிருப்தியின் கோடைக்காலம்' மற்றும் நீதிமன்ற சவால்கள் இருந்த போதிலும், புதிய விதிகள் நாளை நடைமுறைக்கு வரவுள்ளன.

எனினும், தொழிற்சங்கங்கள் போராட்டத்தைத் தொடரப் போகின்றன எனத் தெரிவித்துள்ளன.

# நோர்த் யோர்க் சூட்டுச் சம்பவம் காணொளி வெளியிடப்பட்டது

ஒன்றாரியோ, செப்ரம்பர் 08

கடந்த மாதம் நோர்த் யோர்க்கில் உள்ள நெரிசலான பிளாசாவில் இரண்டு துப்பாக்கிச் சூடு நடத்தியதைக் காட்டும் காணொளியை ரொறன்றோ பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

இது பிராம்ப்டனைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவரைக் கொன்ற சம்பவம் தொடர்பிலானதாகும்.


ஓகஸ்ட் 27 அன்று ஷெப்பர்ட் அவென்யூ வெஸ்ட் மற்றும் வெஸ்டன் ரோட்டின் கிழக்கே ஆபிரகாம் வெல்ஷ் ரோடு பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூடு பற்றிய தகவலை ரொறன்றோ பொலிஸார் நேற்று வழங்கினர்.

மூன்று சந்தேக நபர்கள் வாகனத்தில் பிளாசாவிற்கு வந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீடியோவில், ஆபிரகாம் வெல்ஷ் சாலையில் உள்ள பிளாசாவின் நுழைவாயிலில் ஒரு வெள்ளை எஸ்யூவி நிற்கிறது, மேலும் இரண்டு பேர் வாகனத்திலிருந்து இறங்குகிறார்கள். சிறிது நேரத்தில், அவர்கள் வாகனத்திற்குத் திரும்புவதற்கு முன், பிளாசாவை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்துவதைக் காணலாம். பின்னர் அது விலகிச் செல்கிறது.

பிளாசாவின் நுழைவாயிலில் இரு நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்துவதைப் பிடித்த மற்றொரு காணொளியும் வெளியிடப்பட்டுள்ளது.





# மிசிசாகா விபத்தில் இளம் பெண் சாவு!

## மற்றொருவருக்குப் படுகாயம்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 08

கடந்த வெள்ளியன்று இரவு மிசிசாகாவில் நெடுஞ்சாலை 401 இல் இடம்பெற்ற வாகன விபத்தில் 23 வயதான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் ஒருவர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் உள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலை 9:30 மணியளவில் வின்ஸ்டன் சர்ச்சில் பொலிவர்டுக்கு அருகில் உள்ள நெடுஞ்சாலையின் கிழக்குப் பாதையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் ஒரு பெண்ணையும் ஆணையும் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

இவர்களில் பெண் நேற்று உயிரிழந்தமையை பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

வேகமாக வாகனம் செலுத்தியமை விபத்துக்கான காரணமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.



# ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய மிட்டாய்கள் கண்டுபிடிப்பு!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 08

'(இறப்பர்) மிட்டாய் போன்ற' ஃபெண்டானில்-லேஸ் செய்யப்பட்ட கம்மிகளைக் கண்டுபிடித்தமை குறித்து மக்களுக்கு ஹெமில்டன் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் நடத்திய விசாரணைப் பற்றிய விவரங்களையோ அல்லது ஆபத்தான கம்மிகள் பற்றிய கூடுதல் தகவலையோ பொலிஸார் வழங்கவில்லை.

இது தொடர்பில் ஊடகங்கள் ஹெமில்டன் பொலிஸாரைத் தொடர்பு கொண்ட போதும், எத்தனை கம்மிகள் கைப்பற்றப்பட்டன என்பது பற்றிய தகவலுக்கு பதில் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

'மிட்டாய் போன்ற இந்த ஆபத்தான பொருள்கள், பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கு கடுமையான ஆபத்தை விளைவிக்கின்றன, குறிப்பாக இளைஞர்கள் அறியாமல் அவற்றை உட்கொள்ளலாம்' என்று பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# பூர்வகுடி சம்மேளனத்தின் தலைவர் திடீரென மயங்கி விழுந்து மரணம்

மனிடோபா, செப்ரம்ர் 08

மனிடோபா மாகாணப் பூர்வகுடி தலைவர்கள் சம்மேளனத் தலைவர் கெத்தி மெர்ரிக் மரணமடைந்தார்.

வின்னிபெக் நீதிமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் உரையாடும் வேளையில் மயங்கி விழுந்த மெர்ரிக் மரணமடைந்தார்.

மயங்கி விழுந்த அவருக்கு அவசர சிகிச்சை வழங்கிய பொலிஸார் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார் என மனிடோபா மாகாணப் பூர்வகுடி தலைவர்கள் சம்மேளனம் வெள்ளிக்கிழமை இரவு வெளியிட்ட ஓர் அறிக்கையில் உறுதிப்படுத்தியது.

2022இல் மனிடோபா மாகாணப் பூர்வகுடி தலைவர்கள் சம்மேளனத்தின் வரலாற்றில் முதல் பெண் தலைவராக மெர்ரிக் தெரிவானார்.

அவர் கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற தேர்தலில் மீண்டும் தலைவராகத் தெரிவானார்.

அரசாங்கத்தின் பல மட்டங்களில் பிரதிநிதிகள் அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, முதற்குடி அமைச்சர் கரி ஆனந்தசங்கரி, வடக்கு விவகார அமைச்சர் டேன் வென்டால், மனிடோபா முதல்வர் வெப் கீய்னிவ், வின்னிபெக் நகர முதல்வர் ஸ்கொட் கில்லிங்ஹம் உள்ளிட்ட பலரும் இவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.




# பரா ஒலிம்பிக்ஸ் போட்டியில் கனடாவுக்கு 29 பதக்கங்கள்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 08

2024 பரிஸ் பரா ஒலிம்பிக்ஸ் போட்டியில் பத்தாவது நாளில் கனடா மேலும் ஆறு பதக்கங்களை வென்றுள்ளது.

இதில் இரண்டு தங்கப் பதக்கங்கள், இரண்டு வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்கள் என்பன அடங்கும்.

இந்த ஆறுப் பதக்கங்களுடன் கனடாவின் மொத்தப் பதக்கங்களின் எண்ணிக்கை 29ஆக உயர்ந்துள்ளது.

2016ஆம் ஆண்டு ரியோ பரா ஒலிம்பிக்ஸ் பெற்ற பதக்கங்களுக்கு இணைய எண்ணிக்கையாக இது உள்ளது.

பத்தாவது நாளில், ஒஸ்டின் ஸ்மீங்க் ஆண்கள் 800 மீற்றர் போட்டியில் தங்கப் பதக்கத்தையும், டேனியலா டொரிஸ் பெண்கள் 50 மீற்றர் பட்டர்பிளை நீச்சல் போட்டியில் தங்கப் பதக்கத்தையும் வென்றனர்.

இதன்மூலம், இது பத்து தங்கப் பதக்கங்கள், ஒன்பது வெள்ளிப் பதக்கங்கள், மற்றும் 10 வெண்கலப் பதக்கங்களை கனடா வென்றுள்ளது.

போட்டியின் இறுதிநாளான இன்று பரா கெனோவ் மற்றும் சக்கர நாற்காலி கூடைப்பந்து போட்டிகள் கனடாவுக்கு பதக்கங்களைக் கொண்டு தரும் போட்டிகளாக எதிர்பார்க்கப்படுகின்றன.